**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**அசல் வழக்கு எண். 42/2020**
**வா.சா.1 –கதிரேசன்**

**24–10–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 7 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் 12ம் வகுப்பு படித்துள்ளேம். தாவா சொத்து எந்த கிராமத்தில் எந்த காலையில் உள்ளது என்றால் திருப்பூர் வடக்கு வட்டம், வேலம்பாளையம் கிராமம், க.ச. 24, 25 காலையில் உள்ளது. தாவா சொத்தின் செக்குவந்தி தெரியுமா என்றால் பாரக்குழிக்கு தெற்கே, ரோட்டிற்கு வடக்கே, வண்டி பாதைக்கு கிழக்கே, வேறு ஒருவர் பூமிக்கும் மேற்கே உள்ளது. தாவா சொத்தின் சுவாதீன அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் சுவாதீனத்தில் உள்ளதற்கு என்ன ஆவணம் தாக்கல்செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினை ஆவணம், கிரைய ஆவணம் மற்றும் இதர ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன்.

2. நான் சுவாதீனத்தில் உள்ளதை காண்பிக்க மின் கட்டண ரசீது, குடிநீர் கட்டண ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் தாவா சொத்தில் கட்டிடம் இல்லை, வெறும் பூமியாகதான் உள்ளது. சொத்துவரி ரசீதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது தாத்தாவின் பெயரில் உள்ளது. நான் சுவாதீனத்தில் இல்லாததால்தான் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(மேலும் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI
Digitally signed by A SUBASHRI
Date: 2025.10.24 12:57:51 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.